# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 28 வெள்ளிக்கிழமை 12.07.2024 கதிர் 298







# ஜூலை 14ஆம் திகதிக்குப் பிறகு ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க

**ஜனாதிபதித் தேர்தலுக்கு சட்ட மற்றும் நிதித் தடைகள் எதுவும் இல்லை, என்று இலங்கைத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க உறுதிபடக் கூறியுள்ளார்.**

**அத்துடன், தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட நிதிகளில் பிரச்சினைகள் இல்லை எனவும் தேர்தலைத் தொடர தங்களுக்கு சட்டபூர்வ அனுமதியுள்ளது எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.**

2➤




## கேள்விகளுக்கான பதில்களை வழங்காத அமைச்சர்கள் வருடக்கணக்கில் காலத்தை இழுத்தடித்து வருகின்றனர்!

### சாணக்கியன் எம்.பி. சபையில் இன்று குற்றச்சாட்டு



இருநாட்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி பதில் தொடர்பான விவாதத்தின் போது. என்னால் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட இரு கேள்விகளுக்கான பதில்கள் உரியவர்களிடம் இருந்து சரியான முறையில் எனக்கு கிடைக்கவில்லை, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சபையில் இன்று குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இக்கேள்விகள் நிதி மோசடி, மத்தியவங்கி மற்றும் நாட்டினதும் மக்களினதும் பொருளாதாரப் பிரச்சனையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகளாகும். ஒரு மாதத்தில் பதில் தருவதாகவும் இரு மாதத்தில் பதில் தருவதாகவும் கால அவகாசம் கேட்டு பல வருடங்களாக பதில் அளிக்காமல் உள்ளார்கள்.

கேள்விகளுக்குப் பதில் அளித்துவிட்டார்கள் என்று சில நேரங்களில் கூறப்பட்டாலும் அதற்கான பதில் ஹன்சார்ட் புத்தகங்களில் இல்லை. அதற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர்கள் இவ்விதம் அசண்டையீனமாக இருப்பதனைப் பார்த்தால் இவ்வாறான கேள்விகளுக்குப் பதில் அவர்களிடம் இல்லை என்பது மிகவும் தெளிவாக விளங்குகின்றது! இதற்கான பதிலை அவர்கள் அளித்தால் அவர்களுடைய குட்டு வெளியே வந்துவிடுமோ என்ற பயம் அவர்களிடத்தில் காணப்படுகின்றது. என்னால் முன்வைக்கப்பட கேள்விகளில் இன்றளவிலும் பதிலளிக்கப்படாமல் பல கேள்விகள் உள்ளன.

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், பொதுமக்கள் 2➤

## ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுக! மேலுமொரு அடிப்படை உரிமைகள் மனு தாக்கல்

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்படாததால் ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரியும், 19ஆவது திருத்தத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு பொதுவாக்கெடுப்பு நடத்துமாறும் கோரி சட்டத்தரணி அருண லக்சிறி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இதில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், நாடாளுமன்ற பொதுச் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக, ஒரு வருடத்திற்கு பின்னர் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையில் அரசியலமைப்பின் 70ஆவது சரத்து திருத்தப்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திருத்தத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும் ஜனாதிபதி கையொப்பமிடாததாலும் இந்தத் திருத்தத்தை சட்டமாகக் கருத முடியாது என்றும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் சட்டமாக ஏற்றுக்கொள்வது தவறானது எனவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் 2➤

## பிரதமர் தினேஷ் வடக்குக்கு விஜயம் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்!

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன வடக்குக்கு இன்று விஜயம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கேற்றார்.

முன்னதாக இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் 2➤



## யாழ்ப்பாணம் நெல்லியடியில் தேடுதல் 17 பேர் கைதுசெய்யப்பட்டதாக தகவல்!



யாழ்ப்பாணம் நெல்லியடிப் பகுதியில் பொலிஸாரினால் இன்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த கைதுநடவடிக்கையானது, இன்று அதிகாலை நெல்லியடி - துன்னாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச புலனாய்வாளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், இராணுவத்தினர், பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியுடன் குறித்த 17 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, நீதிமன்றால 2➤

## ஜனாதிபதித் தேர்தல் குறித்த மொட்டுவின் நிலைப்பாடு வரும் 25 ஆம் திகதி அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் 25 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவால் அன்றைய தினம் விசேட உரை நிகழ்த்தப்படவுள்ளது எனவும், இதற்காக பிரமாண்ட நிகழ்வொன்று நடத்தப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## பிரதமர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர், தொடர்ந்து, சுன்னாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தபால் நிலையக் கட்டடத் திறப்பு விழா, கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு மீன்பிடி சாதனங்கள் மற்றும் உலர் உணவுகள் விநியோக நிகழ்வு மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர் குழுவுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு ஆகியவற்றில் பங்கேற்றார்.

அவற்றினைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள புதிய வர்த்தக சேவை நிலையத் திறப்பு விழாவிலும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பிரதமர் பங்கேற்றார். (05)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமிந்திர தயான் லெனவ என்பவரால் ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரிய மனுவானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளினால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## கேள்விகளுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு இன்றளவிலும் பதில் கூறப்படாமல் பல வருடங்கள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன. அந்தக் கேள்விகளுக்கான பதில்கள் மிக விரைவில் அவர்களிடம் இருந்து கிடைக்க வேண்டும். இல்லையேல் இவற்றிற்கான தீர்வும் இல்லாமல் போய்விடும், என குறிப்பிட்டார். (04)

## ஜூலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தநிலையில், தேர்தலைச் சுமுகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக சட்ட அதிகாரிகள், அரச அச்சக திணைக்களம் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த வாரம் ஜூலை 17ஆம் திகதியன்று நிதி அமைச்சின் அதிகாரிகள் தங்களைச் சந்திக்கவுள்ளதாகவும் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வரும் ஜூலை 14ஆம் திகதிக்குப் பிறகு ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும் ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதன்படி, இவ்வருடம் செப்டம்பர் 17 மற்றும் அக்டோபர் 17ஆம் திகதிகளுக்கு இடையில் ஒரு நாளில் தேர்தலுக்கான வாக்குப்பதிவை நடத்துவதற்கு அனுமதிக்கும் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (04)

## யாழ்ப்பாணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிடப்பட்ட திறந்த பிடியாணைகள், பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டவர்கள், சட்டவிரோத மதுபானமான விற்பனையாளர்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என 17 பேர் செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை இன்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட ஏற்பாடாகியிருந்ததாக பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (04)

## ஜனாதிபதித் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நியமிப்பதா அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி ஆராய்ந்து வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டிலேயே அந்தக் கட்சி நகர்கின்றது எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து குறைந்தபட்சம் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது வளைத்துப் போடுமாறு ரணிலிடம் மொட்டுக் கட்சி இடித்துரைத்துள்ளது. அதனால்தான் வேட்பாளரை அறிவிப்பதற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மொட்டுக் கட்சி கால அவகாசம் எடுத்துள்ளது. (05)

# இலங்கை பசும்பால் உற்பத்தித் தொழிலை மேம்படுத்த இந்தியா – பாகிஸ்தான் உதவி

இலங்கையில் பசும்பால் உற்பத்தித் தொழிலை மேம்படுத்துவதற்காக பசுக்களை வழங்குவதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் இராஜதந்திர மட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளன.


பசும்பால் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் அதிகளவான பாலைப் பெறக்கூடிய பசுக்கள் இல்லாதது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகளை நடத்தியதற்கிணங்க, இந்தியா சாஹிவால் என்ற இனப்பசு மாடுகளையும், பாகிஸ்தான் முரா என்ற வகை எருமை மாடுகளையும் இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் காலநிலைக்கு ஏற்ற பசுக்கள் மற்றும் எருமைகள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மட்டுமே காணப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, சில ஆண்டுகளுக்கு முன்பு, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும், அந்தத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி சட்டத்தரணி பரிந்த ரணசிங்க சட்டமா அதிபராகப் பதவிப் பிரமாணம்



ஜனாதிபதி சட்டத்தரணி பரிந்த ரணசிங்க இன்று பிற்பகலில் சட்டமா அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் இலங்கையின் 49 ஆவது சட்டமா அதிபராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை, நேற்றுக்கூடிய அரசியலமைப்புச் சபை, சட்டமா அதிபராக பரிந்த ரணசிங்கவை நியமிப்பதற்கு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி பரீந்த ரணசிங்க ஏற்கனவே பதில் சட்டமா அதிபராகக் கடமையாற்றி வந்திருந்தார். இவர் இலங்கையின் 38 ஆவது சட்ட மா அதிபரான கே.ஏ. பரிந்த ரணசிங்கவின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (04)

# நபர் ஒருவரைக் கொலை செய்துவிட்டு நாடகமாடிய நால்வர் மடக்கிப் பிடிப்பு

பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கிரலமுல்ல பகுதியில் நபர் ஒருவரைத்தாக்கிக் கொலை செய்துவிட்டு யானை தாக்கியது எனக் கூறி நாடகமாடிய 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரலமுல்ல பகுதியில் கடந்த 7 ஆம் திகதி யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மஹியங்கனை பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் உயிரிழந்தவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகவில்லை என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தனிப்பட்ட தகராறு காரணமாக சில நபர்களால் தாக்கப்பட்ட பின்னர் இரத்தக்காயங்களுடன் யானை தாக்கியது போன்று தேவாலயம் ஒன்றுக்கு அருகில் கொண்டுவரப்பட்டு போடப்பட்டார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்துப் படுகாயமடைந்தவரை அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஹியங்கனை மற்றும் கிராதுருகோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18, 24, 28 மற்றும் 35 வயதுடைய இளைஞர்கள் நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(05)



# காரைதீவில் ஆடிவேல் விழா பாற்குடபவனி இடம்பெற்றது!





காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவத்தின் ஓரங்கமாகிய பாற்குட பவனி இன்று (12) வெள்ளிக்கிழமை கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நடைபெற்றது.

(படங்கள் வி.ரி. சகாதேவராஜா)

# உளச் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் இளைஞர்களை வலுவூட்டும் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உளச் சமூகப் பிரச்சனைகள் தொடர்பில் இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம். ரீ.சரீப் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் உளவளத்துணை உத்தியோகத்தர் ரீ.எம்.எம்.ஹப்ரத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பிரானவளவாளராக அம்பாறை மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் மனுஸ் அபூபக்கர் கலந்து கொண்டு விரிவுரையை நிகழ்த்தினார்.








# வெல்வோம் ஸ்ரீ லங்கா நடமாடும் சேவை இன்றும் நாளையும் கிளிநொச்சியில்!

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வெல்வோம் சிறீலங்கா நடமாடும் சேவை இன்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இது நாளையும் இடம்பெறவுள்ளது.

இன்றைய முதல் நாள் நடமாடும் சேவையினை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் மற்றும் வேலைநாட்டில் வேலைவாய்ப்பை பெற எதிர்பார்த்துள்ளவர்களின் குடும்பத்தினர், பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (02)

# இலங்கை – இங்கிலாந்து இளையோர் கிரிக்கெட் முதல் 4 நாள் போட்டி சமநிலையில் முடிவடைவு



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணி, 19 வயதுக்குட்பட்ட இங்கிலாந்து அணியுடன் இரண்டு 4 நாள் டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிவருகிறது. இதில் முதலாவது போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

போட்டியின் இறுதி நாளான நேற்று இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 56 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போட்டி நிறைவடைந்தது.

இந்தப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணி 269 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்த நிலையில் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

போட்டியின் இறுதி நாளான நேற்று சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடிய சாருஜன் சண்முகநாதன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 118 பந்துகளை எதிர்கொண்டு, 73 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இங்கிலாந்து, வார்ம்ஸ்லியில் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தப் போட்டியின் முதலாவது இன்னிங்ஸ ிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை இளையோர் அணி 85.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 324 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இலங்கை அணி சார்பில் அணித் தலைவர் தினுர கலுப்பஹான 103 ஓட்டங்களையும், நெதன் கல்டெரா 55 ஓட்டங்களையும், தினிரு அபேவிக்ரம 43 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் எளம் பிரென்ச் 4 விக்கெட்டுக்களையும், என் சர்மா, அலெக்ஸ் கிரீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர், முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி போட்டியின் இறுதி நாள் ஆட்டத்தின் போது 72.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இங்கிலாந்து அணி சார்பில் ஃப்ரெடி மெக்கான் 92 ஓட்டங்களையும், கேஷன பொன்சேகா 86 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இலங்கை அணியின் பிரவீன் மனிஷ 6 விக்கெட்டுக்களையும், விஹாஸ் தெவ்மிக 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

77 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை இளையோர் அணி, போட்டியின் இறுதி நாள் ஆட்டநேர முடிவின் போது 56 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இலங்கை அணி சார்பில் சாருஜன் சண்முகநாதன் 73 ஓட்டங்களையும், புலிந்து பெரேரா 34 ஓட்டங்களையும், கயன வீரசிங்க 33 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இங்கிலாந்து அணியின் ஜெய்டன் டென்லி 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். 19 வயதுக்குட்பட்ட இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ள நிலையில், தொடரின் இரண்டாவது போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (04)



## இலங்கை ரி–20 கிரிக்கெட் அணியின் தலைமை பதவியிலிருந்து வனிந்து ஹசரங்க விலகினார்

இலங்கை ரி-20 கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து வனிந்து ஹசரங்க விலகியுள்ளார். இதனை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் நலன் கருதி தலைமைப் பொறுப்புகளிலிருந்து விலகி, வீரராக மாத்திரம் அணியில் தொடர்ந்து செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும், அணியின் தலைமைக்கும், இலங்கை அணிக்கும் ஆதரவாக செயற்படுவதாகவும் வனிந்து ஹசரங்க தனது இராஜினாமாக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா கிரிக்கெட், வனிந்து ஹசரங்க இலங்கை அணியின் முக்கிய வீரராக தொடர்வார் என குறிப்பிட்டுள்ளது. (04)



## கடும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பேருந்துகள் நேபாளத்தில் நடந்த துயரத்தில் 65 பேரைக் காணவில்லை!

நேபாளத்தில் இன்று அதிகாலை நெடுஞ்சாலையில் ஏற்பட்ட நிலச்சரிவினால், சுமார் 65 பயணிகளுடன் சென்ற இரண்டு பேருந்துகள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவத்தில், 7 இந்தியர்களும் காணாமல் போயிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விபத்தில் சிக்கிய ஒரு பேருந்து காட்மண்டு சென்று கொண்டிருந்த ஏஞ்ஜெல் பேருந்து என்பதும், அதில் 24 பயணிகள் இருந்ததாகவும், மற்றொரு பேருந்து காட்மண்டிலிருந்து ரௌதஹத் அருகே கௌர் பகுதிக்கு வந்துகொண்டிருந்ததாகவும், இதில் 41 பயணிகள் இருந்ததாகவும் ஏஎன்ஐ செய்தி தெரிவிக்கிறது.

காட்மண்டுக்கு வந்துகொண்டிருந்த பேருந்தில் இருந்த 21 பயணிகளில் ஏழு பேர் இந்தியர்கள் என்று தெரிய வந்துள்ளது. இந்த பேருந்து ஆற்றுக்குள் கவிழ்வதற்கு முன்பே, அதிலிருந்து குதித்து மூன்று பயணிகள் காயத்துடன் உயிர்தப்பியதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

பேருந்தில் பயணம் செய்த இந்தியர்களில் சந்தோஷ் தாகூர், சுரேந்திர சாஹ், அதித் மியான், சுனில், ஷானவாஸ் ஆலம், அன்சாரி என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்றொரு இந்தியரின் அடையாளம் தெரியவரவில்லை.


மத்திய நேபாளத்தில், ஓடிக்கொண்டிருக்கும் திரிசூலி நதியில் வெள்ளம் பெருக்கெடுத்ததால், அதன் கரைப்பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு, அருகிலிருந்த நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த இரண்டு பயணிகள் பேருந்து ஆற்றில் கவிழ்ந்ததாகவும், இந்த சம்பவம் இன்று அதிகாலை 3.30 மணிக்கு நேரிட்டதாகவும் கூறப்படுகிறது. அடுத்தடுத்து ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு பேருந்துகளில் ஏழு இந்தியர்கள் உள்பட 65 பேர் இருந்ததாகக் கூறப்படுகிறது. சம்பவம் நடந்த நெடுஞ்சாலையின் பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டிருப்பதால், மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்குச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

விபத்து நேரிட்ட இடத்தில் மண் சரிவுகளை அகற்றும் பணியும், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றில், படகுகளில் சென்று பயணிகளை தேடும் பணியிலும் பாதுகாப்புப் படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நேபாளத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, மீட்புப்பணிகளில் தொய்வு ஏற்பட்டதாகவும், சாலை முழுக்க நிலச்சரிவினால் மூடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. சாலையில் பேருந்து சென்றுகொண்டிருந்தபோது, கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டு, சாலையும் சரிந்துவிழ, கீழே ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் வெள்ளப்பெருக்கில், பேருந்துகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்தத் தயரச் சம்பவத்துக்கு அந்நாட்டுப் பிரதமர் புஷ்ப கமல் தஹால் வருத்தம் தெரிவித்துள்ளார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க, அரசின் அனைத்துத் துறைகளுக்கும் உத்தரவிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (04)

## இலங்கை – இந்திய கிரிக்கெட் தொடர் போட்டி விபரங்கள் வெளியிடப்பட்டன



ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவதற்காக இந்திய அணி எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

இந்தத் தொடர்களில் முதலாவதாக இடம்பெறவுள்ள ரி-20 போட்டிகள் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஜூலை 26, 27 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன.

# உடலும் உளமும் நலம் பெற விளையாட்டு முக்கியமாகும்! வலயமட்ட விளையாட்டு நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் கருத்து





(காரைதீவுச் செய்தியாளர்)

உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமாக இருந்தால் விளையாட்டு மிகவும் அவசியமாகும்! என்று சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயமட்ட விளையாட்டு போட்டி இன்று வெள்ளிக்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. முஸ்ரக்அலி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத், நிலோபரா நுஸ்ரத், சியாட், இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மகுமூதுலெவ்வை, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்வில் முன்னதாக அதிதிகள் பாண்ட் வாத்தியம், கோலாட்டம் மற்றும் பல பாரம்பரிய நிகழ்வுடன் வரவேற்கப்பட்டார்கள். நடைபெற்ற பெருவிளையாட்டுகளில் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. அதற்கான வெற்றிக் கிண்ணத்தை பணிப்பாளர் மகேந்திர குமார் வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோபனிடம் வழங்கி வைத்தார்.

## பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய கேட்போர் கூடம் புனரமைக்கப்பட்டு திறந்து வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் புனரமைக்கப்பட்ட கேட்போர் கூடமானது உத்தியோக பூர்வமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஸஹீலா இஸ்ஸதீனினால் திறந்து வைக்கப்பட்டது..

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மதிப்பீட்டுப் பிரிவிற்கான வைத்தியர் டொக்டர் எம்.ஸீ.எம்.மாஹீர், தாய் சேய் நலன் பிரிவிற்கு பொறுப்பான வைத்தியர் டொக்டர் றிஷ்பின், சுகாதாரக் கல்விக்கு பொறுப்பான உத்தியோகத்தர் பைறூஸ் மற்றும் சிரேஷ்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மலீக், பல் மருத்துவர் கடாபி மற்றும் ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இவ்விசேட நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



## பிரபல மோட்டார் சைக்கிள் வீரர்களின் பங்களிப்புடன் கற்பிட்டியில் மாபெரும் மோட்டார் குரோஸ் பந்தயம்!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி கே.ஆர்.சீ அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா ரேஸிங்கழகத்தின் பூரண அனுசரணையில் கற்பிட்டியில் பிரபல மோட்டார் சைக்கிள் வீரர்களின் பங்குபற்றுதலுடன் மாபெரும் மோட்டார் குரோஸ் பந்தயம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 4 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கற்பிட்டி தேத்தாவாடி ரேஸ் மைதானத்தில் இந்தப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

நீண்டநாட்களாக பல்வேறு தடைகளால் இடைநிறுத்தப்பட்ட கற்பிட்டி மோட்டார் குரோஸ் பந்தயம் கற்பிட்டி கே.ஆர்.சீயின் தலைவர் ஜே.எம் தாரீகின் பாரிய முயற்சியினால் நடாத்துவதற்குச் சாத்தியமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியா ரேஸீங் கழகத்தின் பூரண அனுசரனையில் நடைபெற உள்ள மோட்டர் சைக்கிள் பந்தயத்தில் பங்குபற்றுபவர்கள் அதன் கூட்டமைப்பில் பதிவு செய்து, அனுமதிப் பத்திரமும் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

இதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் புதன்கிழமை 17 ஆம் திகதி கற்பிட்டியில் நடைபெற உள்ளது எனவும், கற்பிட்டி மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் பங்குபற்ற விருப்பம் உடையவர்கள் அனைவரும் தவறாது எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்பாக விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி, உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் கே.ஆர்.சீ அமைப்பின் தலைவர் ஜே.எம் தாரீக் தெரிவித்துள்ளார்.




# முல்லைத்தீவு -கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி 3ஆம் கட்ட அகழ்வுப் பணியின் ஏழாவது நாள் நேற்று

## மூன்று மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுப்பு!

முல்லைத்தீவு -கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 7ஆவது நாளான நேற்று மூன்று மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் போராளிகளுக்கு வழங்கப்படுகின்ற இலக்கத் தகடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின்போது ஏழு மனித எச்சங்கள் அடையாளம்காணப்பட்டுள்ள நிலையில் மூன்று உடலங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் இந்த அகழ்வுப் பணி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஆளுமை மிக்க பெண்கள் சமூகத்தில் மலர வேண்டும்! கிழக்கு மாகாண பணிப்பாளர் தனஞ்சயன் தெரிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

“ஆளுமையில் சிறந்த பெண்கள் சமூகத்தில் உருவாக்கப்பட வேண்டும்!” , என்று கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் என். தனஞ்சயன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 2023-2024 கல்வியாண்டுக்கு தையல் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மற்றும் கடந்தாண்டு பயிற்சியைப் பூர்த்தி செய்த பெண்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக் கண்காட்சி மற்றும் விற்பனை நேற்று (11) மருதமுனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ. ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாகாணப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது, பெண்கள் குடும்பத்தின் ஒளி விளக்குகள். ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களின் வகிபாகம் மிக முக்கியமானது. பெண்கள் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியமானது.

வாழ்க்கைக்கு தேவையான திறன்களை பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் எமது திணைக்களம் பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகிறது.

ஆகவேதான் தையல் அடங்கலாக பெண்களுக்கு தேவையான வழிகாட்டல் பயிற்சிகளை நாம் வழங்கி வருகிறோம். ஆளுமையில் சிறந்த பெண்களை சமூகத்தில் உருவாக்குவதை நோக்கமாக கொண்டு எமது கற்கை நெறி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. திணைக்களத்தால் பெண்களுக்கு தையல் பயிற்சி உட்பட வாழ்க்கை திறன் கற்கை நெறி வருடாந்தம் நடாத்தப்படுகிறது.

பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாமல் இடை விலகியவர்களுக்கும் இக்கற்கை நெறி வரப்பிரசாதம் ஆகும். ஏனென்றால், வாழ்க்கையில் உயர்வதற்கு இப்பயிற்சி நெறிகள் ஊக்கிகளாக அமையும். வருடாந்தம் சுமார் 40 பெண்களை கற்கை நெறியில் இணைத்து கொள்கிறோம். இவ்வேலைத் திட்டத்துக்காக பெருமளவு நிதியை செலவிடுகிறோம், என்று தெரிவித்தார்

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரீ.ஏ.நாஹிப் உட்பட திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








## 34 வருட கல்விச் சேவையிலிருந்து ஆரம்பநெறி உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் ஓய்வு!

( காரைதீவுச் செய்தியாளர்)

சம்மாந்துறைவலயஆரம்பநெறி உதவிக்கல்விப்பணிப்பாளர்ஏ.எல். அப்துல் கபூர் தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறுவதையிட்டு வலயக்கல்விப் பணிமனையில் பிரிவுபசாரநிகழ்வு நேற்று முன்தினம் (10) புதன்கிழமை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் முன்னிலையில் இடம்பெற்றது.

சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும், உதவிக்கல்விப்பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி. சகாதேவராஜா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது

சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான பி.பரமதயாளன், என்.எம். நாசிர் அலி, ஏ.எம்.மொகமட் சியாத் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

ஓய்வுபெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். மகுமூதுலெவ்வை, உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் உரையாற்றினர். ஆரம்பநெறி ஆசிரிய ஆலோசகர் இசட்.எம். றிஸ்வி கவிதையாற்றி வாசித்தார்.

கபூரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி வலயக்கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார். அத்துடன்நன்றியுடன்வாழ்த்துரை வழங்கினார்.

24 வருட காலம் ஆசிரியப் பணியையும், 4 வருட காலம் ஆசிரியர்ஆலோசகர்பணியையும், 6வருட காலம் உதவிக் கல்விப் பணிப்பாளர் பணியையும் நிறைவு செய்து கடந்த 9 ஆம் திகதி ஓய்வு பெறும் கபூர் நல்லதொரு வளவாளராவார், என்று உரையாற்றியவர்கள் குறிப்பிட்டனர்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் ஏற்புரை நிகழ்த்தினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2024இல் வெளியிடப்பெற்றது.